
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :23 July 2024

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்

கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

## இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

## முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்

**ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்**
பா. ரம்ஜான்

**சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்"பண்பாடு**
முனைவர் ப. மணிகண்டன்

**கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு**
செ. கயல்விழி

**அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்**
அ. குழந்தைசாமி

**சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்**
சித்ரா.ரா

**திருக்குறளில் வாய்மையில் சமரசம்**
முனைவர் து. சிவசித்ரா

**தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்**
முனைவர் பூ. சேகர்

**ஏகன் அநேகன்**
அகல்யா தர்மலிங்கம்

**Bhakti Marga of Saint Thyagaraja**
R. Sudhalakxmi

**The Evolution of Tattvas in Samkjya Philosophy**
Varun Srivatsan

**வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்**
பொன். கனகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறுதெய்வங்களும் அதன் வழிபாட்டு மரபுகளும்

# Worship Traditions of Folk Deities in Ponneelan's Marupakkam Novel

திருமதி சு.வினோதா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் -05,

*Mrs.S.VINOTHA,*
*Assistant Professori Tamil,*
*Sona College of Arts and Science, Salem — 05,*

**ஆய்வுச்சுருக்கம்**

தொன்றுதொட்டு வரும் வழிபாட்டு முறைகள் மக்களின் பண்பாடு மற்றும் நம்பிக்கையின் வெளிப்பாடுகள். வழிபாடுகள் அவை வழங்கி வரும் பூமியின் இயற்கை அடையாளங்கள் அங்கு மலர்ந்துள்ள வழிபாட்டு மரபுகளில் படர்ந்திருப்பது இயல்பே. அத்தகைய மண் சார்ந்த வழிபாட்டு மரபை நாஞ்சில் வட்டார வழிபாட்டு முறைகளைப் பதிவு செய்துள்ள பொன்னீலன் அவர்களின் மறுபக்கம் புதினத்தின் வழி ஆராய்வதாக இவ் ஆய்வு அமைகின்றது.

## *Abstract:*

*Worship Traditions of Folk Deities are the expressions of People's Culture and beliefs. Worships are the identity of that base. Cults are related to the People's surroundings. This article reveals how worship cultures of Folk Deities are related to the Nanjil People through Ponnelan's Marupakkam Pudhinam.*

**திறவுச் சொற்கள்:**

வழிபாட்டு மரபு, நாஞ்சில் வட்டாரம், பண்பாடு, நம்பிக்கை, இயற்கை அடையாளங்கள்

## *Keywords:*

*Worship tradition, Nanjil Locality, Culture, beliefs, Nature's Identity*

**முன்னுரை**

கடவுள் வழிபாடு என்பது மனிதப்பண்பாட்டின் இன்றியமையாத அங்கமாகும். இயற்கைச் சீற்றங்கள், விலங்குகள், கொள்ளை நோய்கள், ஆகியவற்றிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவே மக்கள் வழிபாடு செய்ய தொடங்கினர். அதுவே நாளடைவில் நாட்டுப்புற வழிபாடாக மாற்றம் பெற்றது. நாட்டுப்புற இலக்கியங்கள் பல கிராமப்புற தெய்வங்களையும் அவை தொடர்பான வழிபாட்டு முறைகளையும் பதிவு செய்துள்ளன. பொன்னிலன் அவர்களின் படைப்புகள் நாஞ்சில் வட்டார தெய்வ வழிபாடுகளை அதன் பின்புலத்தோடு பதிவு செய்துள்ளன. அதனை ஆய்ந்தறிவது இந்நொக்கமாக அமைகின்றது.

**சிறுதெய்வ வழிபாடு**

“சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும்”1 என்பார் எமிலி துர்கீம். “முன்வரலாற்றுக்கால மனிதனின் சமய நம்பிக்கையிலிருந்து தொன்மை மக்களிடையே ஆவி நம்பிக்கையாக மாறிப் பின்னர்ப் பேய், பிசாசு, தேவதை நம்பிக்கைகள் என வளர்ந்து இறுதியில் கடவுள் நம்பிக்கையாகப் படி மலர்ச்சி அடைந்துள்ளது.”2 என்பார் பக்தவத்சல பாரதி. “இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் ஏற்பட்டதே வழிபாடாகும்”3 என்பார் பக்தவத்சல பாரதி. மானிடவியல் கொள்கையாளரான ஈ.பி.டைலரும் சமுதாயவியலாளரான ஸ்பென்சரும் “முன்னோர் வழிபாட்டு முறையை முதிர்ச்சியடையாத மனப்பக்குவமுடையோரின் சமய நம்பிக்கை என மதிப்பிட்டுள்ளனர்.4 பொன்னீலன் அவர்களின் புதினங்களில் நாஞ்சில் நாட்டு மக்களின் முன்னோர் வழிபாட்டு முறையையே காட்சிப்படுத்தியுள்ளன. அவர்களது முன்னோர்கள்

- கொலையுண்ட தெய்வங்கள்
- காவல் தெய்வங்கள்
- குலதெய்வங்கள்
- அச்சுறுத்தும் தெய்வங்கள்
- சமாதி தெய்வங்கள்

என்னும் வகைப்பாட்டின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். பூமியில் வாழ்ந்து மறைந்த முன்னோர்களைச் சிறுதெய்வங்கள் என்றும் வைதீக சமயம் சார்ந்த தெய்வங்களைப் பெருந்தெய்வங்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

சிறுதெய்வங்கள்

சிறுதெய்வக் கோவில்களை அனைத்துக் கிராமங்களிலும் காணலாம். “சமுதாயத்திலே உயர்ந்தோர் தாழ்ந்தொர் கீழோர் மேலோர் பெரியவர் சிறியவர் முதலிய பாகுபாடுகள் தோன்றி

வளர்ந்த்தைத் தொடர்ந்து மனிதனது நிலையில் பிரதிபலிப்பது போல தெய்வங்களும் பெருந்தெய்வம் சிறுதெய்வம் என பகுக்கப்பட்டன. இந்நிலை சமுதாயத்தின் பொருளாதார சமய வேறுபாடுகளைக் காட்டக்கூடியதாக உள்ளது. சிறுதெய்வக்கோவில்களில் மந்திரங்கள் ஓதப்படுவதில்லை. அபிஷேகம், குடமுழுக்கு உள்ளிட்ட சடங்குகள் பின்பற்றப்படுவதில்லை.

பொன்னீலன் அவர்களின் புதினங்களின் சிறுதெய்வங்களைப் பற்றிய செய்திகள் அனைத்தும் கதை வடிவில் பதிவு பெற்றுள்ளன. அனைத்துச் சிறுதெய்வங்களும் மண்ணில் வாழந்து மறைந்தவர்கள். சிலர் கொலையுண்டவர்கள். சிலர் வாழும் போது காவல் தெய்வங்களாக வாழ்ந்து மறைந்தவர்கள். குலதெய்வங்கள், கன்னி தெய்வங்கள், அச்சுறுத்தும் தெய்வங்கள் என பொன்னீலன் அவர்களின் புதினங்களில் பதிவாகியுள்ள சிறுதெய்வங்களை வகைப்படுத்த இயலும். “உலகத்தின் தோற்றம் பற்றிய கதை, மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பது பற்றிய கதை, காதல் கதை, வெள்ளம் பஞ்சம் பற்றிய கதை, காடு கடல் பற்றிய கதை, சாவைப் பற்றிய கதை, மாபெரும் வீரர்களின் கதை, பெரும் போர்கள் பற்றிய கதை, ஐம்பெரும்பூதங்கள் பற்றிய கதை, என்று உலக நாகரீகம் அனைத்திலும் தோன்றிய கதைகளைத் தூய தொன்மங்கள் (*Pure Myths*) அல்லது ஆதிகாலத்தொன்மங்கள் (*Primitive Myths*) என அழைக்கின்றனர்.”5 என க.பஞ்சாங்கம் உரைத்துள்ள கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**குமரி மாவட்ட்த்துச் சிறுதெய்வங்களும் அவற்றிற்கான பழங்கதைகளும்**

**சிறுதெய்வங்கள் எனப்படும் நாட்டார் தெய்வங்கள் அவை தொடர்பான கதைகள், வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள், நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் பரவியுள்ளன. அவை வில்லுப்பாடல்களாகவும் கணியான கூத்துகாளாகவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அத்தெய்வங்கள் சார்ந்த விழாக்களின் போது அக்கலைகள் மக்களுக்கு நிகழ்த்திக் காட்டடப்பட்டு அவற்றின் வரலாறு மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. சில தெய்வங்களின் கதைகள் போரடகளோடு தொடர்புப்படுத்தப்படுகின்றன. பத்திரகாளியம்மன் பெருந்தெய்வங்களோடு தொடர்புப்படுத்தப்படுகிறாள். இவ்வாறு சிறுதெய்வ வழிபாடுகள் கதைகளாக மக்கள் மத்தியில் பரவி வருகின்றன.**

**கொலையுண்ட தெய்வங்கள்**

ஆணவம், கௌரவம், பழிவாங்கல், தப்புவித்தல் போன்ற காரணங்களுக்காகக் கொலையுண்டவர்களுக்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கொவில்கள் எழுப்பப்பட்டுள்ளன. குறிப்பாகத் தென்தமிழ்நாடான குமரி, நெல்லை மாவட்ட பகுதிகளில் இது போன்ற கோவில்களை அதிகம் காணலாம். இவ்வாறு இறந்துபட்டவர்களின் கதைகளைப் பொன்னீலன் தனது படைப்புகளில் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். வாரிசுப்போர் காரணமாகவோ குல

கௌரவத்திற்காகவோ பழிவாங்குவதற்காகவோ கொல்லப்பட்ட மனிதர்கள் நாட்டார் மக்கள் மத்தியில் தெய்வங்களாக வணங்கப்படுகின்றனர். அத்தகைய தெய்வங்களுள்

- அனந்தரன் சேனைக்குட்டி
- சிவனணைஞ்சான் பெருமாள் சாமி சிவனணைஞ்சி அம்மை
- தம்பிமார் எனப்படும் பப்புத்தம்பி, இராமன்தம்பி

போன்றோரின் கதைகள் பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சுட்டப்பட்டுள்ளன.

**சிவனணைஞ்சான் பெருமாள் சாமி சிவனணைஞ்சி அம்மை**

சிவனணைஞ்சான் பெருமாள் சாமி தென்காசி ராஜா. தன் வீட்டில் பணியாற்றிய இரண்டு குழந்தைகளுக்குத் தாயான வண்ணார் இனத்தைச் சார்ந்த சிவனணைஞ்சி அம்மையைத் தன்னோடு இரத்திக் கொள்கிறார். அதனால் கோபமுற்ற வண்ணார் இனத்து மக்கள் தங்களது குல கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இராஜாவைக் கொலை செய்துவிடுகின்றனர். சிவனணைஞ்சி அம்மை அவரை எரித்த சிதையில் விழுந்து இறந்து போகிறாள். இருவருக்கும் கோவில் கட்டி அப்பகுதி மக்கள் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். திருவிழாவின் போது அவர்களின் கதை வில்லுப்பாடலாக நிகழ்த்தப்படுகின்றது

**அனந்தரன் சேனைக்குட்டி**

அனந்தரன் சேனைக்குட்டி ஒரு சிற்றரசன். சூரங்குடி மணிக்காஞ்சிப்பட்டினத்தைச் சார்ந்த பிச்சையாள் என்பவள் கணவனை இழந்தவள். மறவர் கலப்பெண்ணான இவள் தன் மகள் அரிசிப்பிள்ளை மற்றும் மகன் பிச்சைக்காலனுடன் பிழைப்பு தேடி வருகின்றாள். பிச்சைக்காலன் ராஜாவிடம் நேர்மையான முறையில் பணியாற்றி ஏமாற்றுக்காரர்களைக் கண்டறிகின்றான். ஏமாற்றுக்கார்ர்கள் பிச்சைக்காலனைப் பற்றித் தவறான முறையில் கோள் மூட்டிவிட அவன் அரசனால் கொலை செய்யப்படுகின்றான். இதனால் கோபம் கொண்ட அவளது சகோதரஜ அரிசிப்பிள்ளை அரசனைக் கொன்று பழிதீர்த்துவிட்டுத் தானும் இறந்து போகிறாள். இறந்து போன மூவருக்கும் சம்புக்குளத்தங்கரையில் கோவில் எழுப்பப்பட்டுள்ளது. சாந்தப்படுத்தும் நோக்கோடு மக்கள் இவர்களுக்குப் பூசை செய்தும் திருவிழா எடுத்தும் வழிபட்டு வருகின்றனர்.

**தம்பிமார் கதை**

**பப்புத்தம்பி, இராமன் தம்பி ஆகிய இருவரும் சகோதரர்கள். நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியான வேணாட்டை ஆண்ட இராமவர்ம மகாராஜாவின் புதல்வர்கள். தம்பிமார் என அழைக்கப்படுவர். ராஜா இறந்த பிறகு அவரின் மருமகனான மார்த்தாண்டவர்மன் தம்பிமாரைக்**

**கொலை செய்துவிட்டு அரசாட்சி உரிமை பெற்று வேணாட்டை ஆள்கிறார். இவ்வாறு அரசாட்சிக்காகக் கொலை செய்யப்பட்ட தம்பிமாருக்காக வேணாட்டுப் பகுதி மக்கள் மார்த்தாண்டவர்மனுக்குத் தெரியாமல் தம்பிமாருக்காக இருபதிற்கும் மேற்பட்ட கோவில்கள் எழுப்பி வழிபட்டு வருவதாக மறுபக்கம் புதினத்தில் பொன்னீலன் அவர்கள் பதிவு செய்துள்ளார்.**

**காவல் தெய்வங்கள்**

**பொன்னீலனின் படைப்பகளில் கொலையுண்ட தெய்வங்கள் பற்றிய குறிப்புகளை அடுத்துக் காவல் தெய்வங்கள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.**

- *சுடலைமாடன்*
- *மன்னன்*
- *மதிப்பன்;*

*ஆகிய தெய்வங்கள் காவல் தெய்வங்களாகச் சுட்டப்பட்டுள்ளன. ‘‘காவல் தெய்வங்கள் பெரம்பாலும் குலதெய்வங்களுக்காக எழுப்பப்பட்ட கோவில்களில் குறிப்பாகப் பெண்தெய்வக் கோவில்களில் அமைந்திருக்கின்றன. இத்தெய்வங்கள் பெரிதும் கொண்டாடப்படுவதில்லை. வழிபாட்டு முறைகளும் விமரிசையாக இருக்காது. கோவிலின் ஒரு மூலையில் வசதிகளின்றிக் காணப்படும்’’ என்று பொன்னீலன் மறுபக்கம் புதினத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் ‘‘ஆதியில் கன்னி, நான், இயக்கி எல்லாரும் ஒண்ணாத்தான் இருந்தொம். தெம்பில்லாமல் முறுவலிக்கிறார் சுடலைமாடசாமி. அம்மையப்பனுக்கு ஒழுங்காப் பிறந்தவன் நான்தான். நான் எளியவனாயிட்டதால என்னைய இப்ப இங்க கொண்டு நிறுத்திப் போட்டானுக. ஹம்??? எனக்கொரு காலம் வரலாமலா போகும்!’’7 என்ற சுடலை மாடனின் கூற்று கொண்டு காவல் தெய்வங்களின் நிலையை அறிய முடிகின்றது.*

*மக்களுக்காகப் பிறந்து மக்க்க்காகப் போராடித் தங்களது இன்னுயிரை நீத்தவர்களை அக்கிராமத்து மக்கள் காவல் தெய்வங்களாக வணஙகுகின்றனர். அவர்கள் இறந்த பிறகும்கூட தங்களைக் காவல் காத்துத் தங்களுக்கு வரும் ஆபத்துகளில் இருந்த தம்மைப் பாதுகாப்பதாக நம்புகிறார்கள். பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில்*

- *மன்ன்ன்*
- *மதிப்பன்;*

*ஆகிய இரண்டு காவல் தெய்வங்கள் பற்றிய கதைகள் இடம்பெற்றுள்ளன. மன்ன்ன், மதிப்பன் ஆகிய இரு தெய்வங்களும் வள்ளியூரைப் பூர்வீகமாகக் கொண்ட கோவளத்துப் போர்த்தளபதிகள். மக்களைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்ட போரில் வீர மரணமடைந்த*

இவர்களுக்குக் குமரி மாவட்டத்து மக்கள் பீடம் எழுப்பிக் காணிக்கையிட்டு வழிபட்டு வருவதாகப் பொன்னீலன் அவர்கள் தனது மறுபக்கம் புதினத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**குலதெய்வங்கள்**

**குலதெய்வங்கள் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தையோ குலத்தையோ சார்ந்தவர்களால் வழிபடப்பெறுபவர்கள். மக்கள் தாங்கள் வேற்று இடங்களுக்குக் குடி பெயரும் போது தங்களது குலதெய்வக் கோவில்களின் மண்ணை எடுத்துக் குடியேறிய இடத்தில் வைத்து வழிபட்டு வருவது வழக்கம். அத்தகைய தெய்வங்களுள்**

- முத்தாரம்மன்
- அழகிய நாயகியம்மன்
- பத்திரகாளியம்மன்
- கன்னி தெய்வங்கள்

உள்ளிட்ட தெயவங்கள் தொடர்பாக வழங்கப்பட்டு வரும் கதைகள் பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் இடம்பெற்றுள்ளன.

**முத்தாரம்மன்**

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் முத்தாரம்மன் என்றும் பிற பகுதிகளில் முத்தாலம்மன் என்றும் அழைக்கப்படும் பெண் தெய்வ வழிபாடு பற்றிய செய்திகள் மறுபக்கம் புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. குலசேகரப்பட்டினத்தை மூல பதியாகக் கொண்ட முத்தாரம்மன் கோவில் நாஞ்சில் சாட்டுப்பகுதியின் பனை விளையில் பிடிமண் கோவிலாக எழுப்பப்பட்டுள்ளது என்ற செய்தி மறுபக்கம் புதினத்தில் இடம்பெறும் வெங்கடேசன் பாத்தின் வழி அறியலாகின்றது.

**அழகிய நாயகி அம்மன்**

நாஞ்சில் நாட்டின் ஈத்தாமொழிக் குடும்பம் அப்பகுதியில் நன்கு அறிமுகமான ஒரு குடும்பம். இக்குடும்பம் புட்டாபுரம் என்னும் ஊரிலிருந்து குடிபெயர்ந்து வரும் போது தனது குலதெய்வத்தை அவ்வூரிலேயே விட்டு வந்துள்ளனர். அது அவர்களைப் பின்தொடர்ந்து கடலில் மிதந்து பின்தொடர்ந்துள்ளது. இடையில் காணியாளர் வலையில் சிக்க மீன் என்று ஏமாந்த காணியாளர் துளவையால் சிலையாக இருந்த தெய்வத்தின் கண்களைத் தாக்கியுள்ளனர். இரத்தம் பெருகுவதைக் கண்டு அதனைப் பத்திரமாகத் தங்கள் இல்லம் சேர்த்த வழிபாடு செய்து வந்துள்ளனர். ஒரு நாள் தெய்வத்தின் குலத்தில் தோன்றிய மூத்தவர் ஒருவர் கனவில் தோன்றித் தான் இருக்கும் இடத்தை உணர்த்தியுள்ளது. சிலை வடிவில் இருந்த தெய்வத்தை மீட்ட

குலமக்கள் அதற்கொரு கோவிலை அமைத்தனர். அதன் வருடாந்திர திருவிழாவில் அதனைக் கடலில் இருந்து மீட்ட காணியாளர் குடும்பத்திற்கு முதல் மரியாதை செய்யப்படுவதாகப் பொன்னீலன் மறுபக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

கன்னி தெய்வங்கள்

குடும்ப வழிபாடாகக் கன்னி தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. ஒரு குடும்பத்தில் பிறந்து திருமணமாகாமல் இறந்துபட்ட கன்னிப்பெண்களைக் கன்னி தெய்வங்களாகக் கருதி அவர்களுக்கு வீட்டின் கன்னி மூலையில் ஆண்டுதோறும் பூ, ளையல், பொட்டு போன்ற கன்னிப்பெண்கள் விரும்பிப்ப பயன்படுத்தும் பொருட்களைப் படைத்து வழிபாடு செய்வது வழக்கம். மறுபக்கம் புதினத்தில் வெங்கடேசனின் இறந்துபட்ட இரு தங்கைகளுக்கும் வழிபாடு செய்யப்படுவது பற்றி அவரது மனைவி கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

**இடம்பெயர் தெய்வங்கள்**

தமிழ்நாட்டின் சிறுதெய்வங்களுள் பல இடம்பெயர் தெய்வங்களாக அறியப்படுகின்றன. அதாவது மனிதர்களாக வாழ்ந்து ஏதேனும் காரணம் பற்றி இறந்து போனவர்கள் தெய்வங்களாகித் தங்களது வாழிடத்தைவிட்டு வேற்றுப்பிரதேசங்களில் புகுவர். அத்தகு தெய்வங்கள் இடம்பெயர் தெய்வங்களாக அறியப்படுகின்றனர். பொன்னீலன் அவர்களின் புதினங்களில் சேர்வைக்கார சாமி இடம்பெயர் தெய்வமாக அறியப்படுகின்றார்.

**சேர்வைக்காரன் சாமி**

சேர்வைக்காரன் பாண்டி நாட்டைச் சார்நத தெய்வம். பாண்டி நாட்டில் பனையேற்றுக்காகச் சென்றவரோடு நாஞ்சில் நாட்டிற்கு வந்த தெய்வம். பனையேற்றுக்காரரிடம் தனக்குக் கோவில் வெத்துக் கும்பிட்டால் வேண்டியதெல்லாம் தருவேன் என்று கேட்டதற்கிணங்க இவருக்குக் கோவில் கட்டப்பட்டதாகப் பொன்னீலன் குறிப்பிடுகின்றார். சேர்வைக்கார சாமிக்கு வெள்ளிக்கிழமை தோறும் பூசையும் ஆண்டுக்கொருமுறை திருவிழாவும் நடைபெறுகிறது. திருவிழாவின் போது கருங்கிடாய்கள் பலி கொடுக்கப்படுகிறது. திருவிழாக்காலங்களில் சங்கடஞ்சொல்லும் அதாவது ஆருடம் சொல்லும் துடியான சாமியாப மறுபக்கம் புதினம் இவரைக் காட்டுகின்றது.

**அச்சுறுத்தும் தெய்வம்**

இயக்கி அல்லது இசக்கி என்று மக்களால் வழங்கப்படும் பெண் தெய்வம் அச்சுறுத்தும் தன்மை கொண்டதாகப் பொன்னீலன் பதிவு செய்துள்ளார். மாட்டு வண்டியில் பாரம் ஏற்றிக்கொண்டு வெகுதூரம் பணயம் செய்யும் மாட்டு வண்டிக்காரர்கள் வண்டிக்கடியில்

வைக்கோல் வைத்திருப்பர்.சில இரவுகளில் இசக்கி வைக்கோலுக்குள் படுத்துக் கொண்டு வண்டிக்காரர்கள் வைக்கோலுக்குள் கைவிடும் போது தனது தலையை அகப்படச் செய்து தலையில்லாத முண்டமாக வானத்திற்கும் பூமிக்கும் உயர்ந்து நின்று அச்சுறுத்துவாள் என்று மூர்த்தியார் பாத்திரம் கூறுவதாக இடம்பெற்றுள்ளது.

சமாதி தெய்வங்கள்

இறந்துபட்ட மக்களின் சதாமிகள் கோவில்களாக வழிபடப்பெறுவதும் பொன்னீலன் புதினங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- வெள்ளைக்கார சாமி
- மண்டைக்காட்டு பகவதி அம்மன்
- கண்ணம்மா

போன்ற தெய்வங்களின் சமாதிகளை மக்கள் வழிபட்டு வருவது குறித்து மறுபக்கம் புதினம் பதிவு செய்துள்ளது.

வெள்ளைக்கார சாமி கோவில்

தமிழ்நாட்டில் கிறிஸ்தவத்தைப் பரப்பிய ரிங்கல் தௌபெ-யின் சமாதி தான் வெள்ளைக்கார சாமி கூவில் என்று நாஞ்சில் நாட்டு மக்கள் மத்தியில் வழிபடப்பட்டு வருகின்றது. வருடத்திற்கொருமுறை வெள்ளைக்கார சாமிக்குத் திருவிழா எடுக்கப்பட்டு ரொட்டியும் ஆட்டுக்கறியும் படைக்கப்படுகின்றது. “அன்னிக்குப் பூசாரி அந்தக்காலத்து வெள்ளைக்கார்ர் போல கோட்டு சூட்டு போட்டுக்கிட்டு நாற்காலியில உட்காருவாரு. பாட்டில் பாட்டிலா பிராந்தி குடிப்பாரு. அவரு பேச்சு பூரா தஸ்புஸ்ன்னு இங்கிலிசுல தான் இருக்கும். ஆட்டமும் வரும். ரொட்டி, ஆட்டுக்கறி இதுக தான் படைப்போம். சாமி எல்லாருக்குந் திருநீறு குடுத்துச் சங்கடஞ்சொல்லும் ….. ரொமபத் துடியான சாமி. சொன்னது பலிக்கும்”9 என்று வெள்ளைக்கார சாமி பற்றிய செய்திகளைப் பொன்னீலன் படைத்துக் காட்டுகிறார்.

**மண்டைக்காட்டு பகவதி அம்மன் கோவில்**

மண்டைக்காட்டு பகவதி அம்மன் கோவில் நாஞ்சில் நாட்டில் பெயர் விளங்கி நிற்கும் கோவில்களில் ஒன்று. சுயம்புவாக உருவான இக்கோவிலுக்குப் பல கதைகள் வழங்கி வருகின்றன. புற்று ஒன்று மாடுமேய்க்கும் சிறுவர்களால் இடிக்கப்பட்ட போது அதில் இரத்தம் வடிந்துள்ளது. அப்புற்றிற்குப் பூசை கொடுத்துக் கோவில் எழுப்பிய பிறகே இரத்தம் நின்றுள்ளது. புற்றின் வாயில் அம்மனின் முகம் மட்டும் காணப்படும் வகையில் அம்மனின் உருவம்

அமைந்துள்ளதால் மண்டைக்காட்டு பகவதி அம்மன் என்று அழைக்கப்படுவதாக கதை ஒன்று அவ்வூர்ப்பகுதியில் வழங்கி வரகின்றது.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவனாகக் கருதப்படும் ஒருவன் நம்பூதிரி ஒருவரிடம் மாந்திரீகங்களைக் கற்றுக் கொள்கின்றான். தனது குலத்தைச் சொல்லாமல் மறைத்து வேறொரு நம்பூதிரியின் பெண்ணைத் திருமணம் செய்த கொள்கிறான். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் மீன்பிடித்துத் தின்றுள்ளனர். இதைக் கொண்டு அவனது குலத்தை அறிந்த அப்பெண் தன்னையும் கணவன் மற்றும் பிள்ளைகளையும் வீட்டிற்குள் வைத்துப் பூட்டிவிட்டுத் தான் ஒரு பத்தின் என்றால் இம்மாளிகை எரியட்டும் என்று கூறி மாளிகையை எரித்துக் குடும்பத்தோடு இறந்து போகிறாள். அந்தப் பெண்ணே மண்டைக்காட்டு பகவதி அம்மன் என்ற ஒரு கதையும் நிலவி வருகின்றது.

மேற்கண்ட கதையோடு தொடர்புடைய மாரியம்மன் கதை ஒன்றையும் இங்குக் குறிப்பிட வேண்டிது அவியமாகின்றது. “மாரியம்மனின் தோற்றம் தொடர்பாக இருவேறு கதைகள் கூறப்படுகின்றன. அந்தண வகுப்பைச் சார்ந்த அழகிய பெண் ஒருத்தியைத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த இளைஞன் ஒருவன் தன்னை அந்தணன் என்று பொய் சொல்லி மணம் முடித்துக் கொண்டான். திருமணத்திற்குப்பின் அப்பெண் தன் கணவன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன் என அறிந்து அவள் தற்கொலை செய்து கொண்டாள் என்றும் தற்கொலை செய்து கொண்ட அப்பெண் உருமாறித் தண்டனை வழங்கியதால் மாரியம்மன் என்று பெயர் பெற்றாள்”10 என்னும் கதை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இவ்வாறு மண்டைக்காட்டு பகவதி அம்மன் சார்ந்த கதையை ஒத்துப் பிற தெய்வங்களுக்கும் கதைகள் வழங்கப்படுதல் நாட்டுப்புறக்கதைகளின் ஒத்த அடித்தளத்தைக் கொண்ட பண்பாட்டு சாராமசத்தையே காட்டுகிறது என்று கொள்ள இடமளிக்கின்றது.

**காலசாமி**

அம்மன் கோவில்களில் காவல் தெய்வ உருவங்கள் பிரமிடு வடிவ பீடங்களாக அமைந்திருக்கும். காலசாமி, வன்னியடி மறவன், உள்ளிட்ட இருபத்தியொரு பீடங்கள் அம்மன் கோவில்களில் எழுப்பப்பட்டிருக்கும் என்று வெங்கடேசன் சேதுசிற்கு விளக்கும் சூழலில் அம்மன் கோவில்களில் காலசாமி வழிபாடு, நடைபெறும் முறை, அவை பெறும் முக்கியத்துவம், காலசாமியோடு சேர்த்து வழிபடப்பெறும் பிற காவல் தெய்வங்கள் போன்ற செய்திகள் மறுபக்கம் புதினத்தின் வழி அறிய கிடைக்கின்றது.

**தொகுப்புரை**

- நாட்டுப்புற தெய்வங்கள் வழிபடப்படுவதற்கான காரணங்கள் பல.
- கொலையுண்ட மனிதர்கள் இறந்தபின் துன்பம் தராமலிருக்க தெய்வங்களாக வழிபடப்படுகிறார்கள்.
- மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டு உயிரிழந்தவர்கள் இறந்த பிறகும் தங்களைக் காப்பதாக நம்பி மக்கள் அவர்களைக் காவல் தெய்வங்களாக வழிபாடு செய்யப்படுகிறார்கள்.
- தங்கள் குலத்தில் தோன்றி வளர்ந்த முன்னோர்கள் குலதெய்வங்களாக வழிபாடு செய்யப்படுகிறார்கள்.
- காட்டு வழிகளில் அச்சுறுத்தி வந்த சக்திகளுக்குக் கோவில் எழுப்பி அவற்றிற்கு விரும்பியவற்றைப் படைத்து வழிபாடு செய்கிறார்கள்.
- வாழ்ந்து மறைந்த முன்னோர்களின் சமாதிகளில் அவர்கள் மறைந்த முன்னோர்களின் சமாதிகளில் அவர்கள் மறைந்த நாளில் வழிபாடு செய்ய பெறுவதும் நாட்டுப்புற வழிபாடாக அறியப்படுகின்றது.
- இத்தகு நாட்டுப்பு வழிபாட்டு முறைகள் நாஞ்சில் நாட்டில் வழிபடப்பட்டு வரும் முறையைப் பொன்னீலன் அவர்களின் மறுபக்கம் புதினம் காரண காரிய இயல்போடு எடுத்துக்காட்டியுள்ளன.

**துணைநூற்பட்டியல்**


***1. எமிலி துர்கீம். ப-62*** *(Emile Durkheim, The Elementary forms of religious life, Newyork: Free Press 1965)*

***2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப 491***

***3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப 515***

*4. மேலது*

*5. க.பஞ்சாங்கம், நவீன இலக்கியக் கோட்பாடுகள், காவ்யா வெளியீடு, சென்னை -24, முதல் பதிப்பு, டிசம்பர்.2008, ப - 524*

***6. பொன்னீலன், மறுபக்கம், ப-82***

***7. மேலது, ப- 622***

***8. பேராசிரியர் நா.வானமாமலை, உரைநடை வளர்ச்சி, 1999, இயல் — ஐந்து, ப - 151***

*9. பொன்னீலன், மறுபக்கம், ப-123*

*10. பேராசிரியர் நா.வானமாமலை, உரைநடை வளர்ச்சி,*

*11. பேராசிரியர் நா.வானமாமலை, உரைநடை வளர்ச்சி, 1999, இயல் — ஐந்து, ப — 115-121*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் ARAN International e-Journal of Tamil Research அரண்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com